## தொலைதொடர்பு துறையில் ஏற்பட்டுள்ள மாறுபட்ட சூழ்நிலையில் BSNL நிறுவனம் போட்டியைச் சந்திப்பதும், வலிமையான பொதுத்துறை நிறுவனமாக முன்னேற வேண்டியதைக் குறித்து

.

அரசாங்கத்தின் BSNL விரோத கொள்கைகளுக்கு எதிராக நடைபெற்ற BSNL அனைத்து ஊழியர் மற்றும் அதிகாரிகளின் தொழிற்சங்கங்களின் ஒன்றுபட்ட போராட்டங்களின் விளைவாகவும், வாடிக்கையாளர்களுக்கு மேலும் கூடுதல் சேவைகளை வழங்குவதற்காக ' புன்னகையோடு கூடிய சேவை ' போன்ற இயக்கங்களை அமுல்படுத்தியதன் விளைவாகவும், எந்த வித பங்கு விற்பனையும் இல்லாமல் முழுவதும் 100 % அரசுக்குச் சொந்தமான பொதுத் துறை நிறுவனமாக BSNL பாதுகாக்கப் பட்டுள்ளதோடு, அதன் நிதி நிலைமையும் முன்னேறத் துவங்கி விட்டது என்பதை 31.12.2016 முதல் 3.2.2017 வரை சென்னையில் நடைபெற்ற BSNL ஊழியர் சங்கத்தின் அகில இந்திய மாநாடு கவனத்தில் எடுத்துக் கொள்கிறது.

BSNL -இன் சேவைகளின் மூலமான வருமானம் 4.43% அதிகரித்துள்ளது. 2014-15- இல் 27242.23 கோடி ரூபாயாக இருந்தது 2015-16 - இல் 28449.42 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. 2014-15 – இல் 1402.97 கோடி ரூபாயாக இருந்த பிற வகையிலான வருமானம், 2015-16- இல் 4469.42 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. 2014-15- இல் 672 கோடி ரூபாயாக இருந்த செயலாக்க லாபம், 2015-16 - இல் 3378 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. ஒட்டு மொத்த நஷ்டம் என்பது, 2014-15- இல் 8234.09 கோடி ரூபாயாக இருந்தது, 2015-16- இல் 3879.92 கோடி ரூபாயாகக் குறைந்துள்ளது.

புதிய மொபைல் வாடிக்கையாளர்களைப் பெறுவதில், 2016 ஆகஸ்ட் மாதம் வரை 2016- ஆம் ஆண்டில் பெரும்பாலான மாதங்களில் BSNL முதலிடத்தில் இருந்தது. ஆனால், 5.9.2016 முதல் ரிலையன்ஸ் ஜியோ நிறுவனம் மொபைல் சேவையைத் துவங்கிய பிறகு, பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் ஆசீர்வாதத்தோடு சட்டங்களை வளைத்து ஏராளமான சலுகைகளைப் பெற்றதால் அதன் நுழைவு ஒரு கரும்புள்ளியே. 4 ஜி அலைக் கற்றையை அது பெற்ற வழிமுறையையும், 2001- ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப் பட்ட விலையில் 2016- ஆம் ஆண்டிற்கு ஒருங்கிணைக்கப் பட்ட உரிமத்தை அது பெற்ற வழிமுறையையும் மத்திய தணிக்கைக் குழு ஆட்சேபித்துள்ளது.

ரிலையன்சுக்கு அரசாங்கம் ஆதரவளிப்பதை எடுத்துக் காட்டும் வகையில், பிரதம மந்திரி மோடியின் புகைப்படம் ரிலையன்ஸ் ஜியோவின் சந்தை விளம்பரங்களில் பயன்படுத்தப் பட்டது.

ஆனால், ரிலையன்ஸ் ஜியோ, இணையதளத்தில் குரல் அழைப்புகளை தகவல்களாக தருவதன் மூலம் இலவச அழைப்புகளையும், குறைவான கட்டணத்தில் 4 ஜி தகவல் சேவைகளையும் அளிக்கத் துவங்கியது என்பது அதன் வரவின் முக்கியத்துவமாகும்.
சேவை துவக்கிய செப்டம்பர் 2016- இல் மட்டும், அது 1.59 கோடி வாடிக்கையாளர்களைப் பெற்றது. இவ்வாறு குரலையும், தகவலையும் குவிக்கின்ற யுகத்தை அது துவக்கியது.

இவ்வாறு, இந்த போட்டியைச் சந்திக்கவும், தொடர்ந்து நிலைத்திடவும், குரல் அழைப்புகள் தகவல்களாக வழங்கப் பட வேண்டும், குரல் அழைப்புகள் மூலமான வருமானத்தில் ஏற்படும் நஷ்டத்தை ஈடு கட்ட தகவல் போக்குவரத்து வேகமாக அதிகரிக்கப் படவேண்டும், இதற்காக போதுமான 4 ஜி அலைக்கற்றையும், கண்ணாடி இழைக்கற்றை வலைக்கட்டுமானம் தேவைப் படுகிறது. அதற்கான வலைக்கட்டமைப்பு அளவிடப் பட வேண்டும்.

ஆனால், முழுமையான 4 ஜி அலைக்கற்றை BSNL -க்கு மறுக்கப் பட்டது. BWA அலைக்கற்றை என்ற பெயரில் BSNL- க்கு வழங்கப் பட்ட 4 ஜி அலைக்கற்றையின் அலைவரிசை பயன் தரவில்லை.

பத்திரிகைச் செய்திகளின் அடிப்படையில், 4 ஜி சேவை வழங்கும் திறன் கொண்ட 700 MHz அலைவரிசையில் அலைக்கற்றை வழங்குமாறும், இந்த அலைக் கற்றைக்கான கட்டணத்தை, நிறுவனத்தில் அரசின் பங்குத் தொகையின் கூடுதலாக வழங்கப் பட்ட தொகையாக பாவிக்க வேண்டும் எனவும், BSNL நிர்வாகம் அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. இந்த 700

MHz அலைக் கற்றையை தற்போதுள்ள 2500 MHz BWA அலைக்கற்றையுடன் இணைப்பதன் மூலம், அலைக்கற்றையின் வழித்தடத்தில் 4 ஜி சேவைகளை வழங்க BSNL- ஆல் முடியும்.

தனது பொதுத் துறை விரோத - BSNL விரோத அணுகுமுறையின் காரணமாக இந்த வேண்டுகோளை அரசாங்கம் பரிசீலிக்கவில்லை. எனவே WIFI HOT SPOT-இல் உள்ள வரையறுக்கப் பட்ட பகுதிகளுக்குள் 4 ஜி சேவைகளை வழங்க BSNL நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளது. பிற அனைத்துப் பகுதிகளிலும் BSNL வாடிக்கையாளர் 3 ஜி சேவைகளை மட்டுமே பெற முடிகிறது.

அலைக்கற்றை வழித்தடத்தில் 4 ஜி சேவைகளை அனைத்துப் பகுதிகளிலும் வழங்காமல், குறைவான கட்டணங்களையும், இலவச குரல் அழைப்புகளையும் அறிவிப்பது என்பது, வரும் சில ஆண்டுகளில், 4 ஜி தகவல் சேவைகள்தான் ஆதிக்கம் செலுத்தும் என்ற மாறுபட்ட சூழ்நிலையில் போட்டியைச் சந்திப்பதற்கு BSNL -க்கு பெருமளவில் உதவாது.

எனவே, மாறுபட்ட சூழ்நிலையில் போட்டியைச் சந்திப்பதற்கும், தொடர்ந்து நிலைப்பதற்கும், BSNL -க்கு இலவசமாக 4 ஜி அலைக்கற்றையை வழங்க வேண்டும் என்று அரசாங்கத்தை நிர்ப்பந்திப்பது அவசியமானதாகும்.

BSNL -இல் உள்ள 65000 டவர்களைப் பிரிப்பதற்கும், துணை டவர் நிறுவனம் அமைப்பதற்கும் மோடி அரசாங்கம் திட்டமிட்டுள்ளதோடு, அதைச் செயலாக்கப் போகின்றது. BSNL -ஐத் துண்டு துண்டாக பிரித்து தனியார்மயமாக்குவதுதான் அதன் நோக்கம் என்பதால், BSNL -இல் உள்ள அனைத்து ஊழியர் மற்றும் அதிகாரிகளின் சங்கங்களும் இதனை முற்றிலும் எதிர்க்கின்றன. டவர் நிறுவனம் அமைப்பதை எதிர்த்து, 15.12.2016 அன்று 100% வெற்றிகரமான வேலைநிறுத்தம் நடைபெற்றது. ஆனால் அரசாங்கம் அதற்கு இணங்க விரும்பவில்லை.

BSNL -க்கு 2012-13- ஆம் ஆண்டில் கிராமப்புற தரைவழி இணைப்புகளில் ஏற்பட்ட நஷ்ட்த்தை ஈடுகட்டுவதற்காக, சமீபத்தில் 1250 கோடி ரூபாய் வழங்குவதற்கு அரசாங்கத்தை நமது போராட்டங்கள் நிர்ப்பந்தித்துள்ளன. ஆனால் இந்த நஷ்ட ஈடு இனி வழங்கப் பட மாட்டாது எனவும் அரசாங்கம் அறிவித்துள்ளது. BSNL துவங்கப் பட்ட போது, கிராமப் புற தரைவழி இணைப்புகளில் ஏற்படும் நஷ்டம் ஈடு செய்யப் படும் என்ற உறுதிமொழியை இது மீறுவதாகும்.

மேற்கண்ட அனைத்து அம்சங்களையும் கவனத்தில் கொண்டு, இந்த அகில இந்திய மாநாடு, பின்வரும் கோரிக்கைகளை முன்வைக்கிறது. 4 ஜி அலைக் கற்றை BSNL -க்கு வழங்கப் பட வேண்டும். துணை டவர் நிறுவனம் அமைக்கும் நடவடிக்கையை நிறுத்த வேண்டும். வலைக் கட்டமைப்பை விரிவாக்கவும், மேம்படுத்தவும் தேவையான கருவிகளையும், கேபிள்களையும், இயந்திரங்களையும், இதர சாதனங்களையும் வாங்குவதற்கு BSNL -க்கு உதவ வேண்டும்.

BSNL மேலும் முன்னேறுவதற்காக BSNL -இன் அனைத்து ஊழியர் மற்றும் அதிகாரிகள் சங்கங்களின் கூட்டமைப்பு எழுப்பியுள்ள இதர அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்றுமாறு இந்த மாநாடு அரசாங்கத்தைக் கோருகிறது.

துணை டவர் நிறுவனம் அமைப்பதை நிறுத்தவும், 4 ஜி அலைக்கற்றை ஒதுக்கவும், கருவிகள் வாங்க உதவவும், கிராமப் புற தரைவழி இணைப்புகளின் நஷ்டத்திற்கு ஈடு வழங்கவும், பிற கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளவும் அரசாங்கத்திற்கு கடுமையான நிர்ப்பந்தம் ஏற்படுத்தும் வகையில், மேலும் ஒன்றுபட்ட, வலுவான, தீவிர போராட்டங்களுக்கான அணி திரட்டுதலை முன்னெடுக்குமாறும், மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்திடுமாறும் மத்திய தலைமையகத்திற்கு இம்மாநாடு வழிகாட்டுகிறது.

மேலும் மேலும் வாடிக்கையாளர்கள் BSNL - க்கு வரும் வகையிலும், அதன் சந்தைப் பங்கு நிலை கணிசமாக உயரவும், புன்னகையோடு சேவை இயக்கத்தை மேலும் தீவிரமாகவும் உத்வேகத்துடனும் நடத்துமாறு, அனைத்து ஊழியர்களையும் அதிகாரிகளையும் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.